## <u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு சார்வாரி வருடம் பிப்ரவரி மாதம் **15.02.2021–ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 51 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகள் பலமுறை ஏலம் நடத்தியும் ஏலம் கோர யாரும் முன்வராததால், நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி நிதி இழப்பினை தடுக்கவும், நகராட்சி வருவாயை மேம்படுத்தவும், நகராட்சி அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து, ஏற்கனவே மண்டல அளவில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகையை மறுநிர்ணயம் செய்ய 11.02.2021 தேதியின் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் உத்திரவிடப்பட்டது.

அதனடிப்படையில் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண். 1709 / 2019 /அ3–ன்படி கீழ்கண்டவாறு குழு அமைக்கப்பட்டது.

| வ. எண் | கடை அமைவிடம் | கடை எண் |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையக் கடை எண் | 3 |
| 2 | பேருந்து நிலையக் கடை எண் | 4 |
| 3 | பேருந்து நிலையக் கடை எண் | 8 |
| 4 | தீத்தாம்பாளையம் கடை எண் | 1 |

| வ.எண் | சீராய்வுக்குழு உறுப்பினர்கள் பெயர் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. கே. மணி | நகராட்சிப் பொறியாளர் |
| 2 | திரு. எம்.பி. முத்துவேல் | மேலாளர் |
| 3 | திரு. என். அல்லிமுத்து | நகரமைப்பு ஆய்வர் |
| 4 | திரு. டி. சின்னதுரை | வருவாய் ஆய்வாளர் |

மேற்படி குழு கடைகளை கள ஆய்வு செய்து, சந்தை மதிப்பு அடிப்படையில் மறுநிர்ணயம் செய்ய வேண்டிய கடைகளின் வாடகையினை நிர்ணயித்து, கீழ்கண்டவாறு அறிக்கை சமர்பித்துள்ளது.

### <u>சீராய்வுக்குழுவின் பரிந்துரை</u>

**<u>பேருந்துநிலைய கடை எண். 3</u>**

கடை எண் 3 பேருந்து நிலையத்தில் உட்புறத்தில் அமைந்துள்ளது. கடை எண். 3 பேருந்து நிலைய கடைகள் பொது ஏலம் விடப்பட்ட வருடம் 2009. மேற்படி 2009 ஆம் வருடம் முதல் திரு. டி. சிவக்குமார் என்பவர் குத்தகையை நடத்தி ஒன்பது வருட குத்தகை முடிவுற்றது. பின்னர் சந்தை மதிப்பீட்டு குழுவால் ரூ. 8000/- வாடகை நிர்ணயம் செய்யப்பட்டத்தில் 01.04.2018 முதல் ரூ. 10,000 /- வாடகை விகிதத்தில் 31.03.2019 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகை நடத்தி வந்துள்ளார். பிறகு 01.04.2019 முதல் குத்தகையை திரும்ப ஒப்படைந்துள்ளார். மேற்படி கடை வாகன போக்குவரத்து இல்லாத ஒருசில பேருந்துகள் மட்டுமே வரும் இடமாகும். இக்கடைக்கு அருகாமையிலுள்ள கடை எண் 4 மற்றும் 8-க்கு 2018 முதல் தொடர்ந்து 26 ஏல அறிவிப்பு குத்தகைதாரர்களுக்கும் நான்கு முறை மாவட்ட அளவிலான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும் ஏலம் போகாமல் உள்ளது. மேலும் வெளியில் பேருந்து நிலையத்தை சுற்றி அமைந்துள்ள தனியார் கடைகளுக்கு வாடகை மிகவும் குறைவாக உள்ளது. இதனால் நகராட்சி கடை ஏலம் போகாமல் நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக தணிக்கை தடையும் எழுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைகளுக்கு கீழ்கண்டவாறு வாடகைத் தொகை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>பேருந்துநிலைய கடை எண். 4 மற்றும் 8</u>**

கடை எண் 4 மற்றும் 8 பேருந்து நிலையத்தில் உட்புறத்தில் அமைந்துள்ளது. கடை எண். 4-க்கு பேருந்து நிலைய கடைகள் பொது ஏலம் விடப்பட்ட வருடம் 2009. மேற்படி 2009 ஆம் வருடம் முதல் திரு. டி. சிவக்குமார் என்பவர் குத்தகையை நடத்தி ஒன்பது வருட குத்தகை 31.03.2018ல் முடிவுற்றது. கடை எண் 8–க்கு செல்வராஜ் என்பவர் குத்தகை நடத்தி ஒன்பது வருட காலம் 31.03.2018-ல் முடிவுற்றது. பின்னர் சந்தை மதிப்பீட்டு குழுவால் ரூ. 8000 /- வாடகை நிர்ணயம் செய்யப்பட்டத்தில் 01.04.2018 முதல் நாளது தேதி வரை 36 ஏல அறிவிப்பு குத்தகைதாரர்களுக்கும், நான்கு முறை மாவட்ட

அளவிலான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும் ஏலம் போகாமல் உள்ளது. மேலும் வெளியில் பேருந்து நிலையத்தை சுற்றி அமைந்துள்ள தனியார் கடைகளுக்கு வாடகை மிகவும் குறைவாக உள்ளது. இதனால் நகராட்சி கடை ஏலம் போகாமல் நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக தணிக்கை தடையும் எழுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைகளுக்கு கீழ்கண்டவாறு வாடகைத் தொகை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

**<u>தீத்தாம்பாளையம் கடை எண். 1</u>**

கடை எண். 1 தீத்தாம்பாளையம் கடைகள் பொது ஏலம் விடப்பட்ட வருடம் 2009. மேற்படி 2009 ஆம் வருடம் முதல் திரு. சண்முகம் என்பவர் குத்தகையை நடத்தி ஒன்பது வருட குத்தகை முடிவுற்றது. பின்னர் சந்தை மதிப்பீட்டு குழுவால் ரூ. 1050 /- வாடகை நிர்ணயம் செய்யப்பட்டத்தில் 01.04.2018 முதல் 8 ஏலம் கோரப்பட்டதில் 10.07.2018-ல் 8-வது ஏலத்தில் திரு. பி. வீரமணி என்பவர் கலந்துகொண்டு ரூ. 1150 /- வாடகை விகிதத்தில் 12.07.2018 முதல் 31.03.2019 வரை ஆறு மாத காலம் குத்தகை நடத்தி 01.04.2019 முதல் குத்தகை திரும்ப ஒப்படைந்துள்ளார். மேற்படி கடையானது நகரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ளதாலும், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து குறைந்த பகுதி என்பதாலும், ஒருசில பேருந்துகள் மட்டுமே நின்று செல்லும் நிலையுள்ளதாலும், மேற்படி கடைக்கு 26 ஏலம் அறிவிப்பு குத்தகைதாரர்களுக்கும், நான்கு முறை மாவட்ட அளவிலான தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டும் ஏலம் போகாமல் உள்ளது. இதனால் நகராட்சி கடை ஏலம் போகாமல் நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக தணிக்கை தடையும் எழுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைகளுக்கு கீழ்கண்டவாறு வாடகைத் தொகை நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்யப்படுகிறது.

| வ. எண். | அமைவிடம் | கடையின் விபரம் | அளவு (சதுர அடி) | முந்தைய வாடகை | மறு நிர்ணயம் வாடகை | தற்போதைய குழு நிர்ணயித்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| 1 | பேருந்து நிலையம் | கடை எண். 3 | 103 ச.அடி | 4650 | 8000 | **6180** |
| 2 | பேருந்து நிலையம் | கடை எண். 4 | 103 ச.அடி | 3086 | 8000 | **6180** |
| 3 | பேருந்து நிலையம் | கடை எண். 8 | 103 ச.அடி | 3171 | 8000 | **6180** |
| 4 | தீத்தாம்பாளையம் | கடை எண். 1 | 140 ச.அடி | 383 | 1050 | **1050** |

2018–ம் ஆண்டு முதல் மேற்படி கடைகளுக்கு பலமுறை ஏல அறிவிப்பு குத்தகைதாரர்களுக்கும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டும், எவரும் குத்தகை எடுக்க முன்வராததால் வருவாய் இழப்பாவதுடன் விளம்பரம் செலவும் ஏற்படுகிறது. எனவே மேற்குறிப்பிட்ட ஏலம் எடுக்காத கடைகள் பூட்டிய நிலையில் உள்ளதால், கட்டிடம் தேய்மானம் ஆவதுடன் சேதாரமாகிறது. மேலும் எந்த நோக்கத்திற்காக கட்டிடம் கட்டப்பட்டதோ அதற்கான பயன்பாட்டிற்கு விடாமல் வருவாயின்றி உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நகராட்சிக்கு தொடர்ந்து வருவாய் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், நகராட்சி நிர்வாக நலன் கருதி சீராய்வுக்குழுவின் பரிந்துரைக்கப்பட்ட வாடகையை 4 கடைகளுக்கும் அரசு மதிப்பீடாக ஏற்று பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1) வெள்ளகோவில் நகராட்சிக்கு தொடர்ந்து ஏலம் போகாததால் ஏற்பட்டுள்ள தொடர் நிதி இழப்பை தடுக்கும் பொருட்டும், கட்டிடம் நாளுக்கு நாள் தேய்மானம் அடைவதை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்ட கடைகளின் அமைவிடத்தில் அருகில் அமைந்துள்ள கடைகளின் வாடகையை கருத்தில் கொண்டும் சீராய்வுக்குழுவின் பரிந்துரையை ஏற்கலாம்.
2) மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மாத வாடகை அடிப்படையில், நாளிதழில் விளம்பரம் செய்தும், ஏலம் நடத்திடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1709 / 2019 /அ3)**

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 52 / 2021</u>**

இந்நகராட்சியில் திரு. த. ஜெகநாதன் அவர்கள் துப்புரவு ஆய்வராக பணியாற்றி பின்னர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 1215 / J1 / 2016, நாள். 22.08.2016-ன்படியும், இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 1236 /

2016 / சி1, நாள். 24.08.2016-ன்படியும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு பணிமாறுதலில் சென்று தற்பொழுது கோயம்புத்தூர் மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்.

மேற்குறிப்பிட்டபடி துப்புரவு ஆய்வர் திரு. த. ஜெகநாதன் அவர்கள், தன்னை நிரந்தரமாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியமர்த்தக் கோரி கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளதால், மேற்படி நபரை கோயம்புத்தூர் மாநகராட்சியில் நிரந்தரமாக பணியமர்த்த வேண்டி இந்நகராட்சியில் தடையின்மை சான்று வழங்கக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து கடிதம் (ந.க.எண். 20536 / 2019 / மா.ந.அ.3, நாள். 15.02.2021) வரப்பெற்றுள்ளது.

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி, இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வராக பணியாற்றி பின்னர் அயற்பணி அடிப்படையில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியாற்றி வரும் திரு. த. ஜெகநாதன் அவர்களை நிரந்தரமாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஈர்த்துக் கொள்ள இந்நகராட்சிக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 161 / 2021 / சி1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 53 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் **2020–21** திட்டத்தின்கீழ் சிமெண்ட் மற்றும் தார்சாலை புதுப்பித்தல் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று அரசு ஒப்பந்த விதிமுறைகளின்படி ஒரு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் தமிழ்நாடு முழுவதும் விளம்பரம் வெளியிட்டமைக்கு பட்டியல் தொகை ரூ. **1,41,960 /–** (Invoice No. P / 333 / DEC-20, நாள். **30.12.2020**) வழங்கக் கோரி Flame Advertising Company Private Limited, Chennai நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ. **1,41,960 /–**ஐ "Flame Advertising Co. Pvt., Ltd.," பெயரில் காசோலையாக வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

தொகை வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 535 / 2020 / இ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 54 / 2021</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21, காடையூரான்வலசில் உள்ள வீரக்குமார் ஸ்பின்னிங் மில்ஸ் மற்றும் தெண்டபாணி டெக்ஸ்டைல்ஸ் ஆகிய நிறுவனங்கள் நகராட்சிக்கு ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய சொத்துவரியை செலுத்தாதது குறித்து காங்கயம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு (வழக்கு எண். 702 / 2014, 703 / 2014 ஆகிய இரண்டு வழக்குகள்) தொடர்ந்து விசாரணை நடைபெற்று வந்ததில், 12.12.2020–ந் தேதிய விசாரணையில் வழக்கு Lok adalat -க்கு மாற்றம் செய்யப்பட்டு மேற்படி எதிர்மனுதாரர் 26.01.2021–க்குள் வரி நிலுவைத் தொகை முழுவதையும் செலுத்த உத்தரவிடப்பட்டு, எதிர்மனுதாரர் வரி முழுத் தொகையும் 16.12.2020 மற்றும் 06.01.2021–ல் செலுத்தியுள்ளதால் மேற்படி வழக்கானது முடிவுற்றது. எனவே மேற்படி வழக்கில் 2014 முதல் நகராட்சி வழக்கறிஞராக வாதிட்டு வரி நிலுவைத் தொகை முழுவதுமாக பெற்றுத் தந்துள்ளார்.

மேற்படி திரு. சி. ஈஸ்வரமூர்த்தி வழக்கறிஞர் அவர்களின் கடிதம் 19.01.2021–ந் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி இரண்டு வழக்குகளுக்கும், வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 30000 /–ம் வழங்கக் கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ. 30000 /–ம் திரு. சி. ஈஸ்வரமூர்த்தி என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 234 / 2017 / அ1)

**<u>தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

2.3.21

**ஆணையாளர் /**
**தனி அலுவலர்**
**வெள்ளகோவில் நகராட்சி**

# <u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு சார்வாரி வருடம் பிப்ரவரி மாதம் **25.02.2021–ம் தேதி புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 55 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சியின் 2021-2022–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மற்றும் 2020-2021–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(கோப்பு எண். 211 / 2021 / பி1)

**<u>தீர்மானம் – மன்றம் ஒப்புதல் வழங்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 56 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சி / கிராமம், புல எண். 642/2A என்ற முகவரியில் உள்ள இடத்தில் 1.00 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனுதாரர் திருமதி. தேவி, க/பெ. கந்தசாமி, திருமதி. சாந்தி, க/பெ. சுப்பிரமணியன், காமராஜபுரம், வெள்ளகோவில், திருப்பூர் மாவட்டம் அவர்களால் அனுமதி கோரியது, திருப்பூர் மாவட்டம், நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3628 / 2020 / திமா, நாள். 18.01.2021–ல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் வெள்ளகோவில் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின்பகிர்மான இடத்தை, (TANGEDCO) மின்வாரியத்திற்கு தனியாகவும் அல்லது உள்ளாட்சிக்கு தானபத்தரம் மூலம் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்படி மனைப்பிரிவில் திருப்பூர் நகர் ஊரமைப்புத் துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் பெற உத்தேச வரைபடத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு சாலைகளின் மொத்தப் பரப்பு 1352.55 சதுர மீட்டர் இடத்தையும், ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 33.22 சதுர மீட்டர் இடத்தையும் மற்றும் TANGEDCO–விற்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் 22.26 சதுர மீட்டர் இடத்தையும் நகராட்சிக்கு தானமாகப் பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 1352.55 சதுர மீட்டர் மற்றும் மனைப்பிரிவில் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 33.22 சதுர மீட்டர் TANGEDCO–விற்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் 22.26 சதுர மீட்டர் நகராட்சிக்கு தானமாகப் பெற மன்றம் அனுமதிக்கலாம்.
2) மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாகப் பெற்று நகராட்சிக்கு உட்பிரிவு செய்யவும் TANGEDCO இடத்தை உட்பிரிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 1190 / 2020 /எப்1)

**<u>தீர்மானம் – ஒப்புதல் வழங்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 57 / 2021</u>**

இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 51 / 2021, நாள். 15.02.2021–ல் ஏலம் போகாத கடைகளுக்கு இந்நகராட்சி மறுசீராய்வுக் குழுவின் பரிந்துரை தொகையை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 24.02.2021–ல் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் பேருந்து நிலைய கடை எண். 3–க்கு மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் / முகவரி | பேருந்து நிலைய கடை எண். 3–க்கு ஒருமாத வாடகை ஒப்பந்தப்புள்ளி கோரியது (IT, GST இல்லாமல்) |
|---|---|---|
| 1 | திரு. நா. சுகுமாரன், த/பெ. நாச்சிமுத்து, 373, சக்திநகர், வெள்ளகோவில் | ரூ. 6300 /- |
| 2 | திரு. ஆ. செல்வக்குமார், த/பெ. ஆரான், 45, புதூர், கிளாங்குண்டல் | ரூ. 6200 /- |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக் கேள்வியில் அதிகபட்ச வாடகை தெரிவித்த திரு. நா. சுகுமாரன், த/பெ. நாச்சிமுத்து என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்பது குறித்து மன்றத்திற்கு முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) சீராய்வுக் குழுவின் வாடகை நிர்ணயித்தைவிட அதிகம் என்பதால், ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தெரிவித்துள்ள திரு. நா. சுகுமாரன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2019 /அ3)

**தீர்மானம் – மன்றம் ஏற்கலாம்**

**தீர்மானம் எண் : 58 / 2021**

வெள்ளகோவில் நகராட்சி / கிராமம் பகுதியில் திரு. சண்முகம், திரு. சரவணச்செல்வன் மற்றும் திரு. சத்தியமூர்த்தி அவர்களுக்கு சொந்தமான நிலம் ரீ.ச.எண்.592/A1 காலையில் 2.34 1/2 ஏக்கர் பரப்பில் உள்ள நிலத்தின் முன்பகுதியில் உள்ள சாலை நீண்ட காலமாக நகராட்சியின் பயன்பாட்டில் இருந்து வருவதால் மேற்படி நிலையில் உள்ள சாலை பரப்பு பு.ஏ.0.02 வெள்ளகோவில் நகராட்சிக்கு ஒப்படைக்க மனுதாரர்கள் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். மேற்படி குறிப்பிட்ட சாலையை நகராட்சிக்கு ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 195 / 2021 / எப்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 59 / 2021**

வெள்ளகோவில் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு பணி மேற்கொண்டு வரும் DBC பணியாளர்களின் மன்ற அனுமதிக்காலம் 31.03.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1588 / ஜே1 / 2015 நாள். 16.10.2015 மற்றும் துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 509 / அ2 / 2010, நாள். 07.10.2015ல் நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் பரவமால் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளரை நியமனம் செய்யவும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் என தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC பணியாளர்களை நியமித்து 300 வீடுகளுக்கு 2 களப்பணியாளர்கள் நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 16828 வீடுகள் உள்ளதால் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 16828 வீடுகளுக்கு 56 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே இப்பணிக்கு 01.04.2021 முதல் 30.06.2021-ந் தேதி முடிய இப்பணியினை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 18.08.2020-ல் தெரிவித்துள்ள புதிய தினக்கூலி அடிப்படையில் வரிசை எண். 3–ல் மஸ்தூர் II ரூ. 400 /- அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மஸ்தூர் II பணியாளர்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் ரூ. 300 /– என கூலி நிர்ணயம் செய்து 3 மாத காலத்திற்கு தற்காலிக DBC பணியாளர்களை நியமனம் செய்து பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 16,00,000 /- ஆகும். எனவே தற்காலிக DBC களப்பணியாளர்களின் பணிகாலத்தை 01.04.2021 முதல் 30.06.2021 வரை கால நீடிப்பு செய்யவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 16,00,000 /–ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 862 / 2015 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 60 / 2021**

வெள்ளகோவில் நகராட்சி / கிராமம் சொரியங்கிணத்துப்பாளையம், மடாமேடு சாலை முதல் உரக்கிடங்கு செல்லும் இணைப்பு சாலை, ரீ.ச.எண் 430/2, 429/2, 428/3A முகவரியில் நிலையில் 30 அடி

அகலத்தில் உள்ள சாலையை ஒப்படைக்க திருமதி. கலாகனகசபாபதி, சர்வாலயம் மேனேஜிங் டிரஸ்டி, சொரியங்கிணத்துப்பாளையம் அவர்கள் விண்ணப்பம் சமர்பித்துள்ளனர்.

மேற்படி தெரிவிக்கப்பட்ட இடத்தில் சாலை அமைக்கப்பட்டு நீண்ட காலமாக நகராட்சியின் பயன்பாட்டில் இருந்து வருவதாலும் மேற்படி குறிப்பிட்ட சாலை பொதுமக்கள் மற்றும் நகராட்சிக்கு அத்தியாவசியமாக அமைவதாலும் மேற்படி சாலையை நகராட்சிக்கு ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1540 / 2020 / எப்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 61 / 2021</u>**

சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P No.27594 / 2019 கால் கேபிள் (பி) லிட்., நிறுவனத்தால் வெள்ளகோவில் நகராட்சி பகுதியில் தொலைக்காட்சி கேபிள் தடவாடகை செலுத்தியது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளதில் 77–வது எதிர் மனுதாரராக ஆணையாளர், வெள்ளகோவில் நகராட்சி என்ற பெயர் சேர்க்கப்பட்டும், மேற்படி வழக்கினை வெள்ளகோவில் நகராட்சி சார்பாக வாதிட திரு. வி. ஜெயபிரகாஷ் நாரயணன், அரசு சிறப்பு வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்படி வழக்கு தொடர்பான எதிர்வாதுரை தயார் செய்து USR நெம்பர் பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டதில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/-க்கான கேட்பு அறிவிப்பினை சமர்பித்துள்ளார். எனவே மேற்படி திரு. வி. ஜெயபிரகாஷ் நாரயணன், அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/–க்கான காசோலை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1516 / 2019 / எப்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>தீர்மானம் எண் : 62 / 2021</u>**

வெள்ளகோவில் நகராட்சி / கிராமம், புல எண். 323 / A1A என்ற முகவரியில் உள்ள இடத்தில் 2.00 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனுதாரர் திரு. எஸ். கே. கிட்டுசாமி, 35A, பிரியா இல்லம், காவேரி நகர், மேல சிந்தாமணி, திருச்சி மாவட்டம் அவர்களால் அனுமதி கோரியது, திருப்பூர் மாவட்டம், நகர் ஊரமைப்புத் துறை உதவி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 724 / 2020 / தி.மா.1, நாள். 01.07.2020–ல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் வெள்ளகோவில் நகராட்சிக்கும் மற்றும் ஒதுக்கப்பட வேண்டிய மின்பகிர்மான இடத்தை, (TANGEDCO) மின்வாரியத்திற்கு அல்லது உள்ளாட்சிக்கும் ஒப்படைக்கவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் மேற்படி மனைப்பிரிவில் அபிவிருத்திப்பணிகள் ஏற்படுத்தி புகைப்படத்துடனும், உள்ளாட்சிப் பரிந்துரையுடனும், தானப் பத்திரத்தினை நோட்டரி பப்ளிக் சான்றொப்பத்துடனும் அனுப்பக் கோரப்பட்டது. மேற்படி மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் குறிப்பு கோரப்பட்டதில், மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நல்ல நிலையில் உள்ளதாகவும், அடிப்படை வசதிகள் மழைநீர் வடிகால், சிறுபாலம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், தெருவிளக்குகள் அமைக்க மதிப்பீடு ரூ. 2,25,000 /–த்தை நகராட்சி கருவூலத்தில் செலுத்தவும் அறிவுறுத்தப்பப்பட்டது. மேலும் பொது இடம் மற்றும் சாலைகளை நகராட்சிக்கு உட்பிரிவு செய்ய தெரிவிக்கப்பட்டது. எனவே மேற்படி மனைப்பிரிவில் திருப்பூர் நகர் ஊரமைப்புத் துறையில் மனைப்பிரிவு வரைபடம் ஒப்புதல் பெற உத்தேச வரைபடத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு சாலைகளின் மொத்தப் பரப்பு 2192.34 சதுர மீட்டர் இடத்தையும், ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 34.01 சதுர மீட்டர் இடத்தையும் மற்றும் TANGEDCO–விற்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் 36.63 சதுர மீட்டர் இடத்தையும் நகராட்சிக்கு தானமாகப் பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலைகளின் பரப்பு 2192.34 சதுர மீட்டர் மற்றும் மனைப்பிரிவில் ஒதுக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு 34.01 சதுர மீட்டர் TANGEDCO–விற்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய இடம் 36.63 சதுர மீட்டர், நகராட்சிக்கு தானமாகப் பெற மன்றம் அனுமதிக்கலாம்.
2) மனைப்பிரிவில் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானமாகப் பெற்று நகராட்சிக்கு உட்பிரிவு செய்யவும் TANGEDCO இடத்தை உட்பிரிவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

3) தெருவிளக்குகள் அமைக்க மதிப்பீடு ரூ.2,25,000 /-த்தை நகராட்சி கரூவூலத்தில் செலுத்தவும் அறிவுறுத்தலாம்.

(கோப்பு எண். 97 / 2020 /எப்1)

<u>தீர்மானம் – ஒப்புதல் வழங்கப்பட்டது</u>

<u>**தீர்மானம் எண் : 63 / 2021**</u>

இந்நகராட்சி குத்தகை இனங்களுக்கு **24.02.2021–ல்** மறு ஏலம் கோரப்பட்ட ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிட கோரியதன்படி, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் அவர்களின் வெளியீட்டு ஆணை எண். **86–**ன்படி தினத்தந்தி நாளிதழ் பக்கம் எண். **07,** பதிப்பு நாள். **17.02.2021–**ல் விளம்பரம் வெளிவந்தமைக்கு பட்டியல் தொகை ரூ. **7938** /– வழங்கக்கோரி Bright Advertising நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளள. எனவே மேற்படி பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1709 / 2019 /அ3)

<u>**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**</u>

2.3.21

**ஆணையாளர் /**
**தனி அலுவலர்**
**வெள்ளகோவில் நகராட்சி**

02.03.21